1984 மார்ச் 8]

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் அதிகச் செலவாகிறது என்ற காரணத்திற்காக கைவிடப்பட்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அப்படியானால் வேறு ஏதாவது திட்டம் பற்றி ஆலோசிக்கப்படுகிறதா அல்லது இப்பொழுது தண்ணீர் பற்றாக்குறை இல்லாத காரணத்தாலே அரசுக்கு அந்த எண்ணம் போய் விட்டதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, குழுக்கூட்டம் நடக்கும்போது ஒரு யோசனை சொல்கிறார்கள். அந்த யோசனையைப் பரிசீலனை செய்கிறோம். தண்ணீரை நிறுத்தி விட்டுதான் இதைப் போட வேண்டுமென்ற காரணத்தாலும் செலவு புரஹிபிட்டிவ்வாக இருக்கிறது என்ற காரணத்தாலும் கைவிடப்பட்டது என்று சொன்னேன். ஆனால் கிருஷ்ணா நதி நீர் திட்டத்தில் செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து பூண்டிக்குக் கால்வாய் மூலம் தண்ணீர் கொண்டு வரப்படும். இந்தக் கால்வாய் சிமெண்ட் மூலம் பூச்சு செய்யப்பட உள்ளதால் அதன்மூலம் நீர்க் கசிவு நிரந்தரமாகத் தடுக்கப்படும்.

விருத்தாசலம் நகராட்சிப் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் திட்டம்.

222— (* வினா 21550)— திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் நகராட்சியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் வேலை எப்போது பூர்த்தியடையும்?

(ஆ) உடனடியாக வேலையைப் பூர்த்திசெய்து குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(இ) நாச்சியார்பேட்டை, புதுப்பேட்டை போன்ற பகுதிகளுக்குக் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) 1985 ஜூன் மாதத்திற்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) ஆம். இப்பணியை துரிதமாக முடிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(இ) ஆம். இவைகள் கூட்டுக்குடிநீர் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.